# மணப்பாறை நகராட்சி

**2018 – ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ( 31.12. 2018) 31 –ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 31.12.2018 | **பொருள் – 1**<br>தற்போது நகராட்சி பொறியாளரின் அன்றாட அலுவல் பணிகளான குடிநீர் வழங்கல் மற்றும் பல்வேறு திட்டப்பணிகளை களஆய்வு செய்தல், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக ஆய்வுக்கூட்டங்களுக்கு தஞ்சாவூர் சென்று வரவும், மாவட்ட ஆட்சியரின் பல்வேறு ஆய்வுக்கூட்டங்களுக்கு திருச்சிராப்பள்ளி சென்று வருதல் போன்ற அலுவலக பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனம் ஏதும் இல்லை. நகராட்சி பொறியாளரின் அலுவலக பயன்பாட்டிற்காக புதிய Mahindra வாகனம் கொள்முதல் செய்து பயன்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 18.00 இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 450 அனுமதிக்கப்பட்டது.** |
| 31.12.2018 | **பொருள் – 2**<br>மணப்பாறை நகராட்சி 20.85 ச.கி.மீ பரப்புள்ள முதல்நிலை நகராட்சியாகும். இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரிகளும் அதற்கு 15.588 கி.மீ நீளமுள்ள வடிகால் வாய்க்கால்களும் உள்ளன. மேலும், 78.845 கி.மீ நகராட்சி சாலைகளும் 174 தெருக்களும் உள்ளன. 56.292 கி.மீ நீளமுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களும் பயன்பாட்டில் உள்ளன. திடக்கழிவு மேலாண்மை கலவை உரக்கிடங்கும் உள்ளன. நகராட்சி குடிநீர் வழங்கு குழாய்களில் கசிவு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், சாலைகள், தெருக்கள் மற்றும் நகராட்சியில் ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மழைநீர் வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பராமரிக்கவும், மழை மற்றும் புயல் மீட்பு போன்ற அவசர பணிகளில் ஈடுபடுத்தவும், திடக்கழிவு மேலாண்மை பணிகளிலும் பயன்படுத்தவும் Front End Loader with Backhoe (JCB) வாகனம் ஒன்று கொள்முதல் செய்து பயன்படுத்திட பொது நிதி / குடிநீர் நிதி / திடக்கழிவு மேலாண்மை பயனர் திட்ட நிதி போன்றவற்றிலிருந்து ரூ.27.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 451 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 31.12.2018 | **பொருள் – 3**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட திருச்சி–திண்டுக்கல்சாலையில் மேம்பாலம் அருகில் உள்ள ஆத்துவாரியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் நீர்ஆதாரம் இல்லாததால் புதிதாக 2எண்ணிக்கை ஆழ்துளை கிணறு அமைத்து ஒன்று வார்டு எண்.21,22,23,19 ஆகிய பகுதிகளுக்கும் மற்றொண்று வார்டு எண்கள்.6,7,8,9,10 ஆகிய பகுதிகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கு மாண்புமிகு மணப்பாறை சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் அறிவுரையின்படியும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.90 இலட்சத்தில் குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 452**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 31.12.2018 | **பொருள் – 4**<br>மணப்பாறை நகராட்சியில் 2018–19 ம் ஆண்டிற்கு வார்டு எண். 1 முதல் 27 வரையில் உள்ள சிறு மின்விசை பம்புகள் மற்றும் கைப்பம்புகள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 4.50 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணி குடிநீர் பணி என்பதால் குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 453**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 31.12.2018 | **பொருள் – 5**<br>மணப்பாறை நகராட்சியில் 2018–19 ம் ஆண்டிற்கு வார்டு எண். 1 முதல் 27 வரையில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் இதர குடிநீர் பணிகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணி குடிநீர் பணி என்பதால் குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 454**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 31.12.2018 | **பொருள் – 6**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 27 இடங்களில் E.O.I Automatic Water Vending Centre - ரூ.486.00 லட்சம் (நானூற்று எண்பத்து ஆறு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் Automatic Water Vending Centre அமைக்கும் பணி மேற்கொள்ள மாநில ஒப்பந்தப்புள்ளி மலரில் பிரசுரம் செய்தமைக்கான கட்டணம் ரூ.86625.00 (எண்பத்து ஆறாயிரத்து ஆறுநூற்று இருபத்து ஐந்து மட்டும்) Accord Advertising Agencies சென்னை அவர்களுக்கு வழங்குவதற்கும் இதனை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 455**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 31.12.2018 | **பொருள் – 7**<br>இந்நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண்.TN.45 BZ 7050ல் ஏற்பட்டுள்ள கீழ்க்கண்ட பழுதுகளை திருச்சி சிவா ஆட்டோமொபைல்ஸில் சரிசெய்ய அனுதிக்கும் உத்தேச செலவினம் ரூ.116132/– குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1. Break Work, Break Checkup<br>2. 4Weel Greece Packing, Lining Work<br>3. Door Glass ,சரிசெய்தல்<br>4. Front Bumber Bottom, Painting, Tingaring வேலை செய்தல்<br>5. Radiator புதிதாக மாற்றுதல்<br>6. Engine Turbo Oil Leackage சரிசெய்தல்<br>7. Mate 2Nos புதிதாக மாற்றுதல்<br>8. Engine Motor Belt&All Belt Tube புதிதாக மாற்றுதல்<br>9. Battery புதிதாக மாற்றுதல்<br>10. Yellow FOG Lamp புதிதாக மாற்றுதல்<br>11. Water Wash செய்தல்<br>12. வாகனம்180000 கிலோ மீட்டருக்கு ஓடிய காரணத்தால் அதற்குரிய Suspension சரிபார்த்தல் மற்றும் ஆயில் சர்வீஸ் செய்தல்<br>மேற்கண்ட பணிகள் சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1,16,132/–(ஒரு லட்சத்து பதினாறு ஆயிரத்து நூாற்று முப்பத்து இரண்டு மட்டும்)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 456 அனுமதிக்கப்பட்டது.** |
| 31.12.2018 | **பொருள் – 8**<br>இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.848/2018/அ2 நாள்.18.12.2018–ன்படி, 2018–19–ம் நிதியாண்டிற்குரிய நகராட்சி பங்குத் தொகையாக, முதல்நிலையான இந்நகராட்சிக்கு ரூ.50,000/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ரூ.50,000/– செலுத்தவும், செலவு தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 457 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 31.12.2018 | **பொருள் – 9**<br>திரு.சுகுமாரன், த/பெ.ராஜகோபால் நாயுடு என்பவரால் மாண்புமிகு சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளியில் தொடரப்பட்ட வழக்கு AS.No.199/2018–ல் பிரதிவாதியாக இந்நகராட்சி " ஆணையர்" அவர்களை சேர்க்கப்பட்டுள்ளது, மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக , இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.க.பழனிக்குமார் அவர்கள் ஆஜராவதற்கும் மற்றும் அதற்கான வழக்கு செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 458 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**